# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC -244/2023

**வழக்கு சாட்சி : LW8 (PW4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வினோத்குமார் | தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர், கிளாம்பாக்கம் காவல் நிலையம், சென்னை |
| தந்தை பெயர் | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுக்கா | | | | : | |

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**(எதிரிகள் ஆஜர் இல்லை .எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act-1969 Section -6(2) on** the **day 27th day of February 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 - Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar Card of the Witness verified.**

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :-</u>**

1. நான் தற்போது சென்னையில் காவல் உதவி ஆய்வாளராக கிளாம்பாக்கம் காவல் நிலையம், பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.09.2023 ம் தேதி மதியம் 05.30 மணிக்கு இலுப்பூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்த போது புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலினைப் பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் தாலுாக, மங்களாப்பட்டியை சேர்ந்த கருப்பையா மகன் முத்துக்கருப்பையா என்பவரிடம் இருந்து புகார் வாககுமூலம் பெற்று வந்து நிலைய குற்ற எண். 218/2023 இதச சட்டப்பிரிவுகள் 294(b),324.506(2)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அசல் புகார் மனு , முதல் தகவல் அறிக்கையை சமூகம் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். **என்னால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவ் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆகும்**

2. உடன் அன்றைய தினமே மாலை 06.00 மணிக்கு சம்பவம் நடந்த இடமான பாதிக்கப்பட்ட வாதியின் முகவரியான ஆட்டுச் சாலை வீட்டு முன்பு சென்று சாட்சிகள் கருப்பையா மற்றும் சின்னதுரை ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.6**

மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் இவ்வழக்கின் புகார்தாரர் முததுக்கருப்பையா மற்றம் கேள்விப்பட்ட சாட்சிகளான சின்னராசு, செல்வம், செல்லதுரை ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து அவர், அவர்கள் சொன்னவிதத்தில் வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. சாட்சிகள் விசாரணை மற்றும் என்னுடைய தனிப்பட்ட விசாரணையில் சம்பவத்தை உறுதி செய்து வழக்கின் எதிரிகளை தேடிய போது மாண்புமிகு புதுக்கோட்டை அமர்வு நீதிமன்றத்தில் தக்க முன்ஜாமினில் சென்றுள்ள விவரத்தை அறிந்து பின்னர் காயம்பட்ட நபருக்கு சிகிச்சைக் அளித்த புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர் நிவேதிதா என்பவரை விசாரித்து கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு பெற்று இத்துடம்என்னுடைய விசாரணையை முடித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதே சட்டப்பிரிவின் கீழ் சமூகம் நீதிமன்றத்தில் இறுத அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

1. அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எதிரிகள் கம்பால் தாக்கியதாக தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அரிவாளால் வெட்டியதாகவோ, அல்லது வேறு ஆயுதங்களால் தாக்கியதாகவோ புகார் வாக்குமூலத்திலும், எனது விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 ற்கும், எதிரிகளுக்கும் ஏற்கனவே பாதை சம்மந்தமாக முன்விரோதம் இருந்ததாக எனது புலன் விசாரணையில் தெரிய வந்ததா என்றால் தெரிய வந்தது. ஆட்டுச் சாலை என்பது மிகவும் குறுகலாக இருக்கும் என்றாலும், அதில் ஒரு நபர் கீழே குனிந்து தான் செல்லமுடியும் என்றாலும் சரிதான். பொதுவாக ஆட்டுச்சாலையில் மூங்கில் மற்றும் கூர்மையான மரங்களை வைத்து தான் அமைக்க இயலும் என்றால் சரிதான். ஆட்டுச் சாலையில் மின்சார வசதி எதுவும் இல்லை என்றால் சரிதான்.

2. விபத்து பதிவேட்டிலும் தெரிந்த மற்றும் தெரியாத நபர்கள் கம்பால் தாக்கியதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக சான்றுப் பொருட்கள எதுவும் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான்.முன்விரோதம் காரணமாக அ.சா. 1 கொடுத்த பொய்யான புகார் வாக்குமூலத்தை வைத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து , வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல், இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டடுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.